திருச்செங்கோட்டில் கண்ணகிக்கு பத்தினிக் கோட்டம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒழுக்கம், பண்பாடு மற்றும் கலாச்சாரம் ஆகியவற்றில் பெண்ணினத்திற்கே பெருமை தேடித்தந்த கண்ணகிக்கு, திருச்செங்கோட்டிலே வருடா வருடம் மூன்று நாட்கள் தெய்வ வழிபாடு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். மேலும், தமிழறிஞர்கள், அங்கே சென்று பட்டிமன்றம், கவியரங்கம் போன்ற நிகழ்ச்சிகளையெல்லாம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே, உலகப் பெண்களுடைய தனிப்பெரும் தலைவியாகவும், சிறந்த வழிகாட்டியாகவும் பெண்ணின சமுதாயத்திற்குச் சிறந்த கலங்கரை விளக்கமாகவும் இருந்து ஆட்சி நடத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய பொற்கால ஆட்சியில், கண்ணகிக்கு அங்கு ஒரு பத்தினிக் கோட்டம் அமைக்க அரசு மீண்டும் மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யார் யாரெல்லாம் போற்றப்பட வேண்டுமோ, யார் யாரெல்லாம் பெருமைப்படுத்தப்பட வேண்டுமோ, யாரெல்லாம் பெருமைக்கும், புகழுக்கும் உரியவர்களோ, அவர்களையெல்லாம் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு பெருமைப்படுத்தி வருகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அந்த அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வுகளின் அடிப்படையில் இந்த ஆண்டு அரசு அதைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 218, டாக்டர் தே. குமாரதாஸ்; மாண்புமிகு கல்வி அமைச்சர்.

218—

மாணவ, மாணவியரின் மருத்துவ ஆய்வுக் கட்டணத் தொகையை அரசுக் கருவூலம் மூலம் வரவு செலவு செய்தல்.

*** 20373—டாக்டர் தே. குமாரதாஸ்** :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா :-

உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி மாணவ, மாணவிகளிடமிருந்து வசூல் செய்யப்படும் மருத்துவ ஆய்வுக் கட்டணத் தொகையினை அரசுக்

1994 ஏப்ரல் 6]

கருவூலங்கள் மூலம் வரவு செலவு செய்யப் போதுமான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமா?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கருவூலங்கள் மூலம் வரவு செலவு செய்ய இயலாது.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் வசூல் செய்யப்படுகின்ற பணம் அதிகமாக இருக்கிறது. அவைகளுக்கான வரவு–செலவுக் கணக்குகள் முறையாக இல்லாத காரணத்தினால் ஒழுங்கீனங்கள் நடைபெறுவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. எனவே, அவைகளை ஒழுங்கு முறைப்படுத்தும் முகத்தானும், எவ்வளவு பணம் ஆண்டொன்றுக்கு வருகிறது, செலவு எவ்வளவு என்கிற விவரங்களைப்பெறும்பொருட்டும், அதை மறுபரிசீலனை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி மாணவ, மாணவியர்கள் மருத்துவ ஆய்வுத் திட்டத்திற்கு என்று ஒவ்வொரு மாணவ, மாணவியர்களிடமிருந்தும் ஆண்டொன்றுக்கு ரூ. 1 வீதம் தலைமையாசிரியர்களால் வசூலிக்கப்படுகிறது. அப்படி வசூலிக்கப்படும் தொகை முழுவதும் தலைமையாசிரியர்களால் அஞ்சலகச் சேமிப்பு நிதியில் செலுத்தப்பட்டு, அதற்கான கணக்குகள் சரியாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு அஞ்சலகச் சேமிப்பு நிதியில் செலுத்தப்படும் தொகை அதற்காக நியமிக்கப்படும் குழுவின் செயலாளர் மற்றும் பொருளாளருக்கு அனுப்பப்படுகிறது. அவர் இந்தத் தொகையை தேசியமயமாக்கப்பட்ட ஒரு வங்கிக் கணக்கு மூலம் வரவு செலவு செய்து கவனித்துக் கொள்கிறார். இத்திட்டத்தில் கீழ்க்கண்ட செலவினங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. மருத்துவர் ஊதியம், ஊர்தி ஓட்டுநர் ஊதியம், மருத்துவப் பணியாளர்களின் ஊதியம், ஊர்தி வாங்குதல் மற்றும் அதன் பராமரிப்பு. இத்திட்டத்திற்கென அரசால் நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யப்படுவதில்லை. அரசு மானியம் எதுவும் பெறாமலேயே மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் மருத்துவவசதி தனிக் கட்டணத் தொகையிலிருந்துதான் நடத்தப்படுகிறது. எனவே, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி மாணவ, மாணவியர்களிடமிருந்து வசூலிக்கப்படும் மருத்துவ ஆய்வுக் கட்டணத்தை அரசுக் கருவூலம் மூலம் வரவு செலவு செய்ய இயலாது என்று தெரிவித்தேன். இதற்கான கணக்கு முறையாகப் பராமரிக்கப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும் இதனுடைய கணக்கு முறையாகத் தணிக்கை செய்யப்படுகின்றது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11.15

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் இந்தச் சிறுபான்மைப் பள்ளிகளை நடத்தும் தனியாருக்கும் சிறுபான்மைப்பிரிவு கல்லூரி நடத்துகிறவர்களுக்கும் அரசு கட்டிடங்களுக்கான வரிகளை விதிப்பதன் மூலம், அது அவர்களை பல இன்னல்களுக்கு ஆளாக்கியிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது வேறு விஷயம், இதிலே சம்பந்தப்படாதது. அதற்குத் தனிக் கேள்வி போடவும். அதைப்பற்றி ஏற்கெனவே இங்கே விவாதிக்கப்பட்டு பதில் சொல்லியாகிவிட்டது. (குறுக்கீடு)

டாக்டர் தே. குமாரதாஸ் : நம்முடைய அமைச்சர் அவர்கள் எந்தக் கேள்வி கேட்டாலும், பதில் சொல்வதற்குத் தயாராக இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்குத் தனிக் கேள்வி போடவும். (குறுக்கீடு) அது பற்றி ஏற்கெனவே இங்கே பேசப்பட்டு, அதற்குப் பதில் சொல்லப்பட்டிருக்கிறது. உட்காருங்கள். டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு நடைபெற்றுவரும் மருத்துவ ஆய்வுத் திட்டத்தில் வேலை பார்க்கும் டாக்டர்கள், செவிலியர்கள், பாரா-மெடிக்கல் ஓர்க்கர்ஸ் ஆகியோருடைய சம்பளம் 'கன்சாலிடேட்டட் பே' என்ற முறையில் மிகக் குறைவான அளவில் இருக்கிறது. எனவே, அவர்களுக்கும் 'ஹெல்த் டிப்பார்ட்மென்ட்டில்' வேலை பார்க்கும் டாக்டர்கள், செவிலியர்கள், பாரா-மெடிக்கல் ஓர்க்கர்ஸ் போல் சம்பளம் கொடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இது பற்றிய கொள்கை முடிவையே எடுக்க வேண்டியிருக்கும். ஆகவே, தனிக் கேள்வி போட்டு அதற்கான விடையைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 219, திரு. என். ஆர். ராஜேந்திரன்; மாண்புமிகு கல்வி அமைச்சர்.

219—

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு அளிக்கப்படும் மானியத் தொகையைத் தணிக்கை செய்தல்

* **25045**—திரு. என். ஆர். ராஜேந்திரன் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—